


RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் டிசம்பர் 04 * 2025 * மலர் -1 * இதழ்-186* VOL-1 * ISSUE-186 விலை ரூ.3 * பக்கம் -4

# மாற்றுத்திறனாளிகளுக்கு தேவை உரிமை தானே தவிர கருணை அல்ல!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், உலக மாற்றுத்திறனாளிகள் தினம் 2025யை முன்னிட்டு நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் அறிமுக விழாவில், அறிவுசார் குறைவுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்களுக்கான ஹெலன்கெல்லர் விருதினை ஆசிரியர் எஸ். சீதாவுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என். நேரு, கீதா ஜீவன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன். மா. சுப்பிரமணியன் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, டிச.4

மாற்றுத்திறனாளிகளுக்கு தேவை உரிமை தானே தவிர கருணை அல்ல முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை புகைப்படக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். மாற்றுத்திறனாளிகளுக்கு பேட்டரி சக்கர நாற்காலி, மூன்று சக்கர வாகனங்களை முதலமைச்சர் வழங்கினார். இதையடுத்து உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

உலக மாற்றுத்திறனாளிகள் நாளையொட்டி இதயப்பூர்வமான வாழ்த்துகள்.உணர்ச்சிகரமான நெகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி, உங்களை இப்படி பார்த்துக்கொண்டிருந்தால் போதும் என தோன்றுகிறது. மாற்றுத்திறனாளி தோழர்களுக்கு சம வாய்ப்பு என்பதை நினைவுபடுத்தும் நாள் இது.

தி.மு.க. ஆட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்பு, சம உரிமை என்பது உறுதி செய்யப்பட்டது.உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. அமைப்பு கூட இந்த நிகழ்ச்சியைப் பார்த்து பெருமைப்படும்.

பெரும்பாலான மக்கள் தீண்டாமையை கைவிட்டு முற்போக்கு பாதையில் செல்லத் தொடங்கி விட்டனர். கடந்த கால ஆட்சியில் மாற்றுத்திறனாளிகள் புறக்கணிக்கப்பட்டனர். தகாத வார்த்தையில் அவமரியாதை செய்யப்பட்டனர். மாற்றுத்திறனாளிகளுக்கு தேவை உரிமை தானே தவிர கருணை அல்ல.மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக 60க்கும் மேற்பட்ட அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.உள்ளாட்சி அமைப்புகளில் மேலும் 9,000 மாற்றுத்திறனாளிகள் பணி அமர்த்தப்படுவர்விளையாட்டுத்துறையில் மாற்றுத்திறனாளிகள் சாதிப்பதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறன் மாணவர்களுக்கான கல்வி நிதியாக 22,300 பேருக்கு ரூ.7 கோடி கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை 2 மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசு பணிகளில் உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு கூடுதல் பணிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது கலைஞர் ஆட்சியில் தான் மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்துறை உருவாக்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகள் மக்கள் பிரதிநிதிகளாக மாறி என்ன செய்யப் போகிறார்கள் என சிலர் நினைக்கலாம். மாற்றுத்திறனாளிகளை மக்கள் பிரதிநிதிகளாக மாற்றி இருக்கிறோம். சக்கர நாற்காலியில் பம்பரம் போல் சுழன்று உழைத்தவர் கலைஞர் கருணாநிதி. இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னையை மிரட்டிய கனமழை; பொதுமக்கள் பாதிப்பு























# அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் தொற்று நோய்கள், தொற்றா நோய்கள் குறித்து விழிப்புணர்வு!



புதுக்கோட்டை,டிச.4

புதுக்கோட்டைஅருகே அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் மகிழ்முற்றம் குறிஞ்சி குழுவின் மூலம் தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்கள் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது . இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் தமிழ் செல்வி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியர்மணிமேகலைஅனைவரையும் வரவேற்றார்.

மகிழ்முற்ற ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா பேசும் போது தொற்று நோய்கள் என்பது மனித உடலுக்குள் நுழையும் தீங்கு விளைவிக்கும் கிருமிகளால் நோய்க்கிருமிகள் ஏற்படும் நோய்கள். மிகவும் பொதுவான காரணங்கள் வைரஸ்கள், பாக்டீரியாக்கள், பூஞ்சைகள் மற்றும் ஒட்டுண்ணிகள் மூலம் தொற்று நோய்கள் பரவுகின்றன. தொற்றா நோய்கள் என்பவை ஒருவரிடமிருந்து மற்றொருவ ருக்கு நேரடியாகப் பரவாத நோய்களாகும். இதய நோய்கள், புற்றுநோய், நீரிழிவு நோய் மற்றும் நாள்பட்ட நுரையீரல் நோ ய்கள் ஆகியவை பொதுவான தொற்றா நோய்கள். இவற்றி ன் ஆபத்து காரணிகளில் மோசமான உணவு, உடற்பயிற்சியி ன்மை, புகைபிடித்தல் மற்றும் மது அருந்துதல் போன்றவை அடங்கும்

இவை பெரும்பாலும் நீண்டகாலம் நீடிக்கும் நோய்களாகும், மேலும் சில சமயங்களில் நோய் முற்றிய பிறகுதான் அறிகு றிகள் வெளிப்படும். பொதுவான எடுத்துக்காட்டுகள்இதய நோய்கள்,புற்றுநோய்,நீரிழிவு,பக்கவாதம்,நாள்பட்ட நுரையீர ல் நோய்கள்,உயர் இரத்த அழுத்தம் கீல்வாதம் ஆஸ்டியோ போரோசிஸ்,அல்சைமர் நோய்,,மோசமான உணவு உடற்பயிற்சியின்மை போதுமான தூக்கமின்மை,புகைபிடித்தல், மது

அருந்துதல்,மன அழுத்தம் போன்றவை தொற்று நோய்களா கும்என்று பேசினார்.

மேலும் டிசம்பர் 1 உலக எய்ட்ஸ் தினம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது . நிறைவாக ஆங்கில ஆசிரியை சிந்தியா நன்றி கூறினார்.

# கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட கல்லூரி மாணவர்கள் கைது!

கோவை, டிச.4

கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட கல்லூரி மாணவர்களை போலீசார் கைது செய்தனர்.

கோவை பீளமேடு போலீசார் டைட்டல் பார்க் பகுதியில் ரோந்து சென்று கண்காணித்து கொண்டு இருந்தனர். அப்போது ரயில்தண்டவா ளம் அருகே சந்தேகத்திற் கிடமாக நின்றிருந்த வாலி பிடித்து பர்களைவிசாரணைசெய்தனர். அவர்கள்முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்த தால் போலீசார் அவர்களை சோதனை செய்த னர்.

அதில் அவர்களிடம் கஞ்சா இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து போலீசார் அவர்களை போலீஸ் நிலையம் அழைத்து சென் றனர்.

விசாரணையில் அவர் கள் தென்காசியை சேர்ந்த தயாநிதிமாறன் (18) மற்றும் திண்டுக்கல்லை சேர்ந்த பெத்துராஜ்குமார் (18) என்பதும், அவர்கள் தனியார்கல்லூரியில் விடு தியில் தங்கிருந்து முதலாம் ஆண்டு படித்து வந் ததும் தெரியவந்தது. இதையடுத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து கஞ்சா விற்பனையில் ஈடு பட்ட கல்லூரி மாணவர்கள் 2 பேரையும் கைது செய்து, சிறையில் அடைத்தனர்.

அவரிடம் இருந்து 500 கிராம் கஞ்சா மற்றும் அவர்கள் விற்பனைக்கு வைத்திருந்த 20 பிளாஸ் டிக் பாக்கெட்டுகனையும் பறிமுதல் செய்யப்பட்டது.

## தாராபுரம்

# அதிமுக தேர்தல் பாக முகவர்களுக்கு பூத் கமிட்டி, பி எல் ஏ டு ஆலோசனைக் கூட்டம்!



தாராபுரம் டிச.04

திருப்பூர்மாவட்டம் தாராபுரம்அதிமுக தேர்தல் பாக முகவர்களுக்கு பூத் கமிட்டி, பி எல் ஏ டு ஆலோசனைக் கூட்டம் கழக பொதுச்செயலாளர் முன்னாள் முதலமைச்சர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி யார் அவர்களின் ஆணைக்கிணங்ககழகதலைமைநிலைய செயலாளர் எதிர்க்கட்சி கொறடா முன்னாள் அமைச்சர் எஸ் பி வேலுமணி MLA அவர்களின்அறிவுறுத்தலின்படி திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் c. மகேந்திரன் அவர்களின் ஆலோசனைப்படி.தாராபுரம்நகரகழகசெயலாளர் திரு CR என்கின்ற C. ராஜேந்திரன் BE, தலைமையில் இன்று வேல்முருகன் திருமண மண்டபத்தில் பூத் கமிட்டி மற்றும் BLA 2 முகவர்களுக்கு ஆலோசனைக் கூட்டமும் மற்றும் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட கழக பொருளாளர் திரு சின்னப்பன் என்கின்ற பழனிசாமி மாவட்ட கவுன்சிலர் திருமதி பானுமதி கருணாகரன் மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் திரு கோகுல்ராஜ் குண்டடம் முன்னாள் சேர்மன் திரு குப்புசாமி ஓட்டுநர் அணியின் மாவட்ட செயலாளர் திரு பங்க் பி மகேஷ் குமார் மாவட்ட வர்த்தக அணி செயலாளர் திரு கோல்டன்ராஜ் மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் திரு அரசகுமாரன் மாவட்ட மாணவர் அணி துணை செயலாளர் ஜாகிர் அப்பாஸ் நகர மகளிர் அணி செயலாளர் கௌரிசித்ரா முருகேசன் நகர அம்மா பேரவை செயலாளர் திரு கே என் ராமசாமி நகர இளைஞரணி செயலாளர் திரு தினேஷ் குமார். நகர தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் திரு திலிப் சீனிவாசன் மேலும் அனைத்து நகர கழக நிர்வாகிகள் சார்பணி மாவட்ட நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைவரும் கலந்து கொண்டனர்.

## பர்கூர் அருகே

# மல்லப்பாடி ஊராட்சி மன்ற செயலாளரை மாற்ற கோரி கிராம மக்கள் போராட்டம்!



கிருஷ்ணகிரி டிச.4

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே உள்ள மல்லப்பாடி நாடார் கொட்டாய் வெங்கடாபுரம் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய மல்லப்பாடி ஊராட்சியில் தொடர்ந்து சுமார் 25 மேற்பட்ட ஆண்டுகளுக்கு மேலாக ஊராட்சி செயலாளராக பணியாற்றி வருபவர் சசிகுமார் கிராம மக்களிடையே அதிகார தோரணையில் மக்களை மிரட்டும் விதமாகவும் பேசி வருவதாகவும் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாகவும் கிராம மக்கள் குற்றச்சாட்டி பத்துக்கும் மேற்பட்டோர் இன்று ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர் இதனால் கிராமங்களில் எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து தராத ஊராட்சி செயலாளரை கண்டித்தும் கிராம மக்களை அவமரியாதைப்படுத்தும் ஊராட்சி செயலாளரை கண்டித்தும் இன்று அலுவலகம் முன்பு பத்துக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் சுமார் 25 ஆண்டுகளாக ஒரே ஊராட்சியில் பணியாற்றியதால் தான் இது போல அராஜகப் போக்கில் ஈடுபடுவதாகவும் கிராம மக்கள் குற்றச்சாட்டு வைத்துள்ளனர் ஊராட்சி செயலாளர் மாற்றக்கோரி பலமுறை வட்டார வளர்ச்சி அலுவலர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் புகார் அளிக்கும் எந்தெந்த நடவடிக்கை எடுக்கவில்லை என கிராம மக்கள் குற்றம் சாட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர் எனவே மாவட்ட ஆட்சியர் உரிய ஆய்வு செய்து ஊராட்சி செயலாளரை உடனடியாக வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்ய வேண்டும் என கோரிக்கை வைக்கின்றனர். தகவல் அறிந்து வந்த பர்கூர் காவல் துறையினர் சமாதான பேச்சு வார்த்தை நடத்தினார்

# "சென்னை HCL இந்தியா ஸ்க்வாஷ் டூரில் பங்கேற்க 12 நாடுகள், 48 வீரர்கள் தயாராகி வருகின்றனர்"




சென்னை டிச.4

சென்னை இந்தியன் ஸ்க்வாஷ் அகாடமியில் டிசம்பர் 1–5 நடைபெறும் HCL இந்தியா ஸ்க்வாஷ் டூர் – சென்னை சுற்று, 12 நாடுகளைச் சேர்ந்த 48 முன்னணி வீரர்களை ஒன்றிணைக்கிறது. தமிழக விளையாட்டுத் துறை வளர்ச்சி ஆணையத்தின் ஆதரவுடன் நடைபெறும் இந்த உலக தரத்திலான தொடரில், ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளுக்குத் தலா அமெரிக்க டாலர் $15,000 பரிசுத் தொகையும் PSA உலக தரவரிசைப் புள்ளிகளும் வழங்கப்படுகின்றன. ஜெய்ப்பூர், மும்பை, பெங்களூரு சுற்றுகளின் வெற்றியைத் தொடர்ந்து, சென்னை மேலும் உயர் மட்ட போட்டியைக் காணும் என எதிர்பார்க்கப்படுகிறது. எகிப்து, மலேசியா, ஜப்பான், பிரான்ஸ், ஹாங்காங், இலங்கை, குவைத், ஈரான், மால்டா, நியூசிலாந்து மற்றும் இந்தியாவைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்கும் இந்த சுற்றில், இந்தியாவிலிருந்து வேளவன் செந்தில்குமார் (WR 46) மற்றும் அனஹத் சிங் (WR 44) மீது கவனம் செலுத்தப்படுகிறது. சர்வதேசதளத்தில் இப்ராஹிம் எல்கப்பானி (WR 89) மற்றும் மென்னா ஹமேட் (WR 50) முக்கிய சாம்பியன்களாகக் கருதப்படுகின்றனர். HCL குழுமத்தின் AVP மற்றும் பிராண்ட் தலைவரான ராஜத் சண்டோலியா மற்றும் SRFI செயலாளர் சைரஸ் பொஞ்சா இருவரும், இந்த தொடரின் நோக்கம் இந்திய திறமைகளை உலக தரத்தில் உயர்த்துவது என்றும், சமமான பரிசுத் தொகை வழங்கல் ஸ்க்வாஷில் தொழில்முறையையும் சமத்துவத்தையும் வலுப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## லெனோவோ இந்தியா & பாரத் கேர்ஸ்:

# புதுச்சேரி 30 கிராமங்களில் 1,000 ஆற்றல் திறன் LED சாலை விளக்குகள் நிறுவல்"!




புதுச்சேரி டிச.4

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 30 கிராம ங்களுக்கு 1,000 ஆற்றல்திறன் வாய்ந்த LED சாலை விளக்குகளை நிறுவும் முக்கியமான சமூக முன்னெடுப்பை லெனோவோ இந்தியா மற்றும் அதன் கூட்டாண்மைக் கழகமான பாரத் கேர்ஸ் இணைந்து வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. கிராமங்களில் இரவு நேரப் பாதுகாப்பு, போக்குவரத்து வசதி மற்றும் பொது இடங்களில் நம்பகமான வெளிச்சம் ஆகியவை மேம்படுவதற்கு இந்த திட்டம் முக்கிய பங்காற்றுகிறது. . இந்நிகழ்வில் புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஏம்பலம் ஆர். செல்வம், திட்டத்தை பாராட்டி, கிராமப்புற பாதுகாப்பு மற்றும் சமூக வளர்ச்சியில் நம்பகமான சாலை விளக்குகளின் அவசியத்தை வலியுறுத்தினார். லெனோவோ இந்தியா தரப்பில் பிரதிமா ஹரிதே (APAC CSR & Philanthropy Head), ஸ்ரீகாந்த் R. தனக்ஷிருர் (Manufacturing Director) ஆகியோர் பங்கேற்று, MakeinIndia உற்பத்தி விரிவாக்கத்துடன் சமூக மேம்பாட்டில் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினர்.

## புதுக்கோட்டை அருகே

# ஆலங்குடியில் தெற்கு மாவட்டம் தலைவர் பதவிக்கு மறு சீரமைப்பு கலந்தாய்வு கூட்டம்!



புதுக்கோட்டை,டிச.4

புதுக்கோட்டை மாவட்டம் .ஆலங்குடியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் சார்பில்தலைவர்பதவிக்கு மறு சீரமைப்பு கலந்தாய்வு கூட்டம் தனி யார் திருமண மஹாலில் நேற்று நடைபெற்றது. ஆலங்குடி நகரதலைவர் அரங்குளநாதன் அனைவரையும் வரவேற்றார்

கலந்தாய் கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் ராம் சுப்புராம் த லைமையில் நடந்தது.. கூட்டத்திற்கு மாவட்ட மகிலா காங்கிர ஸ் தலைவி சிவந்தி நடராஜன் பொதுக்குழு உறுப்பினர் மணிகண்டன் வட்டார தலைவர் பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடந்தது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் 2026 வட்டார தலைவர் பதவிக்கு மறுசீரமைப்பு இயக்கத்தின் சார்பில் கர்நாடகாவை சேர்ந்த புஷ்ப அமர்நாத் தேர்ந்தெடுக்கப்பட்டு புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடிக்கு நேற்று வந்தார்.

இதையடுத்து ஏற்கனவே காங்கிரஸ் கட்சிக்கு தெற்கு மாவட்டத்திற்கு வட்டார மனுக்கள் பெறப்பட்டுள்ள நிலையில் திருவரங்குளம் ஒன்றியத்துக்கு உட்பட்ட கிழக்கு மேற்கு வட க்கு மற்றும் ஆலங்குடி ஆகிய வட்டார அளவிலான புதியதலைவர்களைதேர்ந்தெடுப்பதற்கு வருகை தந்தனர்.

இது தொடர்பாக யாரை தேர்ந்தெடுக்கலாம் என மேலிட கா ங்கிரஸ் கட்சி உத்தரவின் பேரில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் வட்டார தலைவர் அகஸ்டின் ஐயப்பன் தனராஜ் ஆனந்தன் ரமேஷ் மயில்வாகனன் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை அருகே

# குற்ற வழக்குகளில் தேடப்பட்ட ரவுடி கைது!

புதுக்கோட்டைடிச.4

புதுக்கோட்டை.அருகே கொத்தமங்கலத்தில் கடந்த இரு தினங்களுக்கு முன்பு குற்ற வழக்குகளில் தேடப்பட்ட ரவுடி சிக்கினர் பொதுமக்கள் பிடித்து போலீசில் ஒப்படைத்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே மேலாத்தூர் ஊராட்சி சூரன்விடுதி கிராமத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த் தி மகன் பாவா என்கிற லெனின் (வயது 23)

இவர் கடந்த இரு தினங்களுக்கு முன்பு அதிகாலை கொத்த மங்கலம் கிராமத்தில் இருந்து அவரது ஊருக்கு மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருந்தார் அப்போது லெனின் மோட்டார் சைக்கிளை போதையில் ஓட்டி வந்து ஒரு கார் மீது மோதியுள்ளார்.

பின்னர் அவர் காரில் இருந்தவர்களைகம்பிகளை கொண் டு சரமாரியாக தாக்க முயன்றார் இதை பார்த்த அப்பகுதியை ச் சேர்ந்த பொதுமக்கள் லெனின் பிடித்து தர்மா அடி கொடுத் தனர். பின்னர் மோட்டார் சைக்கிளில் இருந்த 2 பைகளை சோத னை செய்த போது அதில் நகைகள் பணம் இருப்பது தெரிய வந்தது இதையடுத்து பொதுமக்கள் இதுகுறித்து கீரமங்க லம் போலீஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர்.

தகவலின் பேரில் அங்கு வந்த போலீசார் 2 பைகளை சோத னை செய்த போது அதில் ரூபாய் 24 ஆயிரம் 2 கேமராக்கள் 5 செல் போன்கள் வெண்கல தட்டு தங்க.காசுகள் 3 வெள்ளி என லெனினை கைது செய்து அவரிடமிருந்து தங்க காசுகள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்து அவரை அழைத்துச் செ ன்றனர்

ரவுடியான இவர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையி ல் உள்ளது என்பது தேடப்பட்ட குற்றவாளி என்பதும்போலீசார்விசாரணையில் தெரிய வந்தது மேலும் இது குறித்து ஆலங்குடி டிஎஸ்பி தலைமையிலான தனிப்படை போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில் விசாரணை செய்த போலீசார் ஒரு மோட்டார் சைக்கிளை கைபற்றி ஆலங்குடி போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவசுப்பிரமணியன் பாவா என்கிற லெனின் மீது வழக்கு.ப் பதிவு செய்து அறந்தாங்கி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி புதுக்கோட்டை சிறையில் அடைத்தனர்.

## இந்தியாவில்

# புதிய வெளிப்புற தோட்டக்கருவிகள் அறிமுகம் செய்த பாஷ் பவர் டூல்ஸ்!



சென்னை டிச.04

பாஷ் லிமிடெட் இந்தியாவில் தனது புதிய வெளிப்புற தோட்டக்கருவிகள் அறிமுகம் செய்துள்ளது. வீட்டு உரிமையாளர்கள் மற்றும் தொழில்முறை தோட்டக்கலை நிபுணர்கள் எளிதாகவும் பாதுகாப்பாகவும் தோட்டப் பராமரிப்பு பணிகளை செய்ய உதவும் வகையில், ProCORE18V பேட்டரி தொழில்நுட்பத்தில் இயங்கும் ஐந்து மேம்பட்ட வயர் இல்லாத கருவிகள் நிறுவனம் கொண்டு வந்துள்ளது. இது குறித்து பாஷ் இந்தியாவின் பவர் டூல்ஸ் பிரிவு பிராந்தியத் தலைவர் (இந்தியா & சார்க்) திரு. நிஷாந்த் சின்ஹா கூறியதாவது: "இந்த புதிய கருவிகள் தொகுப்பு, செயல்திறன், பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றில் பாஷ் பெயருக்கு உரிய தரத்தை இந்திய தோட்டப் பராமரிப்பு துறையில் மேலும் உயர்த்துகிறது" என்றார்.பிரஷ்லெஸ் மோட்டார், குறைந்த சத்த இயக்கம், நீண்ட நேர பேட்டரி ஆயுள், OptiCut மற்றும் AntiBlocking போன்ற நவீன தொழில்நுட்ப அம்சங்கள் ஆகியவை இந்த கருவிகளின் முக்கிய சிறப்பம்சங்களாகும். லான் மோவர், செயின்ஸா, ஹெட்ஜ் ட்ரிம்மர், லீஃப் ப்ளோவர், கிராஸ் ட்ரிம்மர் ஆகிய ஐந்து கருவிகளும் இந்திய வீடுகள் முதல் தொழில்முறை லேண்ட்ஸ்கேப்பர்கள் வரை பல்வேறு பயனர்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

## புதுக்கோட்டை அருகே

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை முடித்த 17 பேருக்கு தனி மாவட்ட வருவாய் அலுவலர் பாராட்டு!

புதுக்கோட்டை . டிச.4

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளை நேற்று முடித்துக் கொடுத்த வாக்குச்சாவடி நிலை ய அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் 100% முதன் முதலில் முடித்த நபர்கள் 17 பேருக்கு மாவட்ட தனி வருவாய் அலுவலர் பரிசாக பொன்னாடை அனிவித்து புத்தகம் வழங்கி சிறப்பித்தனர். 182 ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முறை பணிகள் தாலுகா அலு வலகத்தில் கடந்த ஒரு மாதமாக நடைபெறுவதற்கு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் அரு ணா உத்தரவின் பேரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தாலுகா அலுவலகத்தில் நடைபெற்று வந்தது. ஆலங்குடி சட்டமன்ற தொகுதி பதிவு அலுவலரும் மாவட்ட வளங்கள் (ம) நுகர்வோர் பாதுகாப்பு



அலுவலர் பார்த்தசாரதி தலைமையில் பணிகள் நடந்து வந்தது ஆலங்குடி வட்டாட்சி யர் வில்லியம் மோ சஸ்,தேர்தல் நடத்தும் துணை அலுவலர் சுசீலா ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்துஅரசு அதிகாரிகள் பல்வேறு அலுவலகங்களில்இருந்து வந்தும். இந்த பணிகைளை 100க்கும் அதிகமான தன்னார்வலர்கள் கலந்து கொண்டு பணியை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் ஆலங்குடி தாலுகாவில் 17 வாக்குச்சாவடி நி லை அலுவலர்கள் கொடுத்த பணியை திறம்பட முதன் முத லில் முடித்ததமைக்காக புதுக்கோட்டை தனி மாவட்ட வருவா ய் அலுவலர் (காவிரி வைகை குண்டாறு) ரம்யாதேவி தலைமையில் தாலுகா அலுவலகத்தில் அவர்களுக்கு ஒதுக்கப் பட்ட பாகங்களில் 100% பணிகளை நிறைவு செய்தமைக்கு ஊ க்குவிக்கும் விதமாக பாராட்டி 17 நபர்களுக்கு பரிசாக பொன் னாடை அணிவித்து புத்தகங்களை வழங்கி சிறப்பித்தனர்.

அப்போது சமூக நல பாதுகாப்பு திட்டம் தனி வட்டாட்சியர் வி ஜயலட்சுமி அலுவலக பணியாளர்கள் வருவாய்த்துறையினர் வீஏஓ மற்றும் பணியாளர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## சேல்ஸ்ஃபோர்ஸ் இந்தியாவில் வலுவான வளர்ச்சி தொடர்கிறது:

# 'ஏஜென்டிக் என்டர்பிரைஸ்' மாற்றத்தில் நிறுவனம் பெரிய பந்தயம்!

சென்னை டிச.04

உலகின் முன்னணி AI CRM நிறுவனமான சேல்ஸ்ஃபோர்ஸ், இந்தியாவில் தொடர்ந்து வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்து வருகிறது.

2025 மார்ச் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டில், நிறுவனத்தின் இந்திய வருவாய் ₹13,384.5 கோடி, கடந்த ஆண்டைவிட 47% அதிகரித்தது. இந்தியாவில் 14,000க்கும் மேற்பட்ட ஊழியர்கள், விரிவடைந்த கூட்டாளிகள், 3.9 மில்லியன் 'டிரெயில்பிளேசர்' சமூக உறுப்பினர்கள், மற்றும் 75,000க்கும் மேற்பட்ட கற்றலாளர்களுக்கு வழங்கப்பட்ட AI திறன் பயிற்சிகள் ஆகியவை இந்த வளர்ச்சிக்கான முக்கிய காரணிகள்.

'ஏஜென்டிக் எண்டர்பிரைஸ்' மாற்றத்தை முன்னெடுக்கும் சேல்ஸ்ஃபோர்ஸ் சேல்ஸ்ஃபோர்ஸ், 'ஏஜென்ட்ஃபோர்ஸ் 360' போன்ற புதிய AI கருவிகள் மூலம், மனிதர்களும் AI ஏ ஜென் ட் க ளு ம் இணைந்து செயல்படும் 'ஏஜென்டிக் எண்டர்பிரைஸ்' மாடலை வணிகங்களுக்கு எளிதில் ஏற்கும் வகையில் வழிகாட்டுகிறது. ஏர் இந்தியா, டாடா ப்ளே, டாடா கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ், பந்தன் வங்கி உள்ளிட்ட முன்னணி இந்திய நிறுவனங்கள் சேல்ஸ்ஃபோர்ஸை பயன்படுத்தி, புதிய வருவாய் வாய்ப்புகள், புத்திசாலித்தனமான செயல்பாடு, மற்றும் வாடிக்கையாளர் அனுபவ மேம்பாடு ஆகியவற்றில் பெரிய முன்னேற்றம் கண்டுவருகின்றன.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா வடசேரி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது இவ் விழாவிற்கு பள்ளி தலைமையாசிரியர் பெர்லா ஜெயந்தி தலைமை தாங்கினார் நாகர்கோவில் மேயர் மகேஷ் மாணவ மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கினார். இவ்விழாவில் வடக்கு மண்டல தலைவர் ஜவகர், அவைத்தலைவர் பன்னீர் செல்வம், முன்னாள் மாணவர் சங்கம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் வைகுந்த ஏகாதசி திருவிழாவினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டு பணிகள் குறித்து அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.சரவணன் தலைமையில் ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் நடைபெற்றது. இந்நிகழ்வில், மாநகர காவல் ஆணையர் காமினி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பாலாஜி, திருச்சி மாநகர காவல் துணை ஆணையர் சிபின், ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் சீனிவாசன். இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் செ.சிவராம் குமார், சு.ஞானசேகரன் மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# தஞ்சாவூர் மாவட்டத்தில் எச்.ஐ.வி. விழிப்புணர்வு பேரணியை அமைச்சர் கோவி.செழியன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

தஞ்சாவூர். நவ.4

தஞ்சாவூர் மாவட்டம் இரயில் நிலையத்திலிருந்து எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில் உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில் உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு இடையூறுகளைக் கடந்து எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான எதிர்வினைகளை மாற்றுதல் செல்வோம் என்ற கருப்பொருளை மையமாக கொண்ட விழிப்புணர்வு பேரணியை உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திர சேகரன், தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டிகே.ஜி.நீலமேகம், துணை மேயர் மருத்துவர் அஞ்சுகம்பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், வருவாய் கோட்டாட்சியர் நித்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சுமார் 1200 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியும். எச்.ஐ.வி தொற்று இல்லாத மாவட்டமாக மாற்ற அனைவரும் முன் வர வேண்டும் என்ற விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பும், ஆட்டோக்களில் விழிப்புணர்வு வில்லை ஒட்டுதல், கையொப்ப பிரச்சாரம், கலை நிகழ்ச்சி. பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றிப்பெற்றவர்களுக்கான பரிசு வழங்குதல், 50 ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள் பெட்டகம் வழங்குதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம் அரண்மனை சங்கீத் மஹாலில் எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில் நடைபெற்ற சமபந்தி விருந்தை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு உணவுகளை பரிமாறினார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பொதுமக்களிடையே பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி எச:ஐ.வி எய்ட்ஸ் தடுப்பு பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையின் கீழ் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலுவலகத்தின் மூலம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ம முத்தமிடுதல், கட்டிப்பிடித்தல், கை குழுக்குதல், உணவு (ம) தண்ணீர். தனிபட்ட பொருட்கள் பொது இடங்கள் பகிர்ந்து கொள்வது போன்ற சாதாரண தினசரி தொடர்பு மூலம் எச்ஐவி பரவாது. எச்ஐவி பரிசோதனையானது அனைத்துமருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இலவசமாக நடைபெறும். எச்ஐவி குறித்த அனைத்து சந்தேகங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு அரசு மருத்துவமனைகளிலும் செயல்படும் நம்பிக்கை மையத்திற்கு செல்லவும் மேலும் தகவலுக்கு 1800 419 1800 அழைக்கவும் 'ஐயம்தவீர்" செயலியை பயன்படுத்தவும். எச்ஐவி எய்ட்ஸ் நோயினை முழுவதுமாக குணபடுத்த முடியால் ய் 39 பாதித்தவரின் உடலில் உள்ள எச்ஐவி கிருமிகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த தற்போது ஏ.ஆர்.டி மையத்தில் கூட்டு மருந்துசிகிச்சைகட்டணமின்றி வழங்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டு மருந்து சிகிச்சை தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கும்பகோணம் ஆகிய இரண்டுமருத்துவமனையிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஆல் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகையாக மாதத்திற்கு ரூ.1000 ம்ஆகஸ்ட் 2025 முதல் 273 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கூட்டு சிகிச்சை மையத்திற்கு வந்து செல்வதற்கு இலவச பேருந்து பயணச்சீட்டு நமது அரசால் வழங்கப்படுகிறது. உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கூட்டு சிகிச்சை பெறுவோருக்கு மாதந்தோறும் ரூ.1000. உதவித்தொகை வழங்கப்படுகிறது அதன்படி இதுவரை 1837 நபர்களுக்கு இம்மாவட்டத்தில் பயனடைந்து வருகிறார்கள். எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களை ஒதுக்குதல் மற்றும் புறக்கணித்தல் சட்டப்படி குற்றமாகும். கூட்டு சிகிச்சை பெறுவோருக்கு மாவட்ட இலவச சட்ட மையம் மூலமாக சட்ட ஆலோசனை மற்றும் உதவிகள் கூட்டு சிகிச்சை மையத்திலே கிடைக்க வழி வகைகள் செய்யப்பட்டுள்ளது.

நோய்தடுப்பு நடவடிக்கையில் விழிப்புடன் செயல்பட்டு புதிய தொற்று இல்லாத மாவட்டமாக தஞ்சையை மாற்ற உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் பா.கலைவாணி, நகர நல அலுவலர் மருத்துவர் நமச்சிவாயம், மண்டல திட்ட மேலாளர் தி.ஜெனிபர் அருள்மேரி, துணை இயக்குநர் (காசநோய்) மருத்துவர் மாதவி, வட்டாட்சியர் சிவகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் ஒன்றியம் தோகூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சியினை பொது மக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டார்கள்.

# வத்தலகுண்டு கருப்பண்ணசாமி கோவில் கும்பாபிஷேக விழா!



வத்தலகுண்டு,டிச.4

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு தெற்கு தெருவில் 500 ஆண்டுகள் பழமையான லெட்சுமி விநாயகர், கருப்பண்ணசாமி, மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது.500 ஆண்டுகளுக்கு முன்புதுங்கள் முன்னோர்கள் நட்டு வைத்த அரிவாள்களை காவல் கருப்பணசாமியாக இப்பகுதி பொதுமக்கள் பழமை மாறாமல் வழிபட்டு வருகின்றனர்.இந்நிலையில் இந்த கோவில்களுக்கு புதிய கோபுரம் கட்டப்பட்டு கும்பாபிஷேக விழா நடந்தது.இதையொட்டி லெட்சுமிவிநாயகர் சிலை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு ஆலயத்தில் புதிதாக நிறுவப்பட்டது.பின்னர் மூன்று நாட்கள் நடைபெற்ற யாக வேள்வி பூஜைகளை தொடர்ந்து பல்வேறு புண்ணிய நதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட புனிதநீர் கோபுர கலசங்கள் மீது ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது.பின்னர் பொதுமக்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது.கும்பாபிஷேகத்தில் ஏராளமான பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.விழா ஏற்பாடுகளை தெற்கு தெரு பொதுமக்கள் இளைஞர்கள் செய்திருந்தனர்.

## காலி பாட்டில் விவகாரம்:

# திருப்பூர் பார் உரிமையாளர்கள் கலெக்டரிடம் முறையீடு!



திருப்பூர், டிச.4

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மதுக்கடைகளில், 244 பார்கள் உள்ளன. இவற்றில், பெரும்பாலான பார்களின் உரிமம் வரும் ஜனவரி மாதம் வரை உள்ளது. பார் ஏலம் எடுத்தோர், சேகரமாகும் காலி மது பாட்டில்களை எடுத்துக் கொள்ளலாம் என்பது விதிமுறையில் உள்ளது. இந்தநிலையில் திருப்பூர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் காலி மது பாட்டில்களை திரும்ப வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், தாங்கள் வருமானம் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்தில் முறைகேடுகள் உள்ளதாகவும் கூறி,

திருப்பூர் மாவட்ட மது பானக்கூட உரிமையாளர்கள் சார்பில் மஜீண்டல மேலாளர் ராஜகோபாலை நேற்று நேரில் சந்தித்தும், இன்று மாவட்ட கலெக்டர் டாக்டர்.மனிஷ் நாராணவரேவிடம் :கோரிக்கை மனு அளித்தனர். அதில், டாஸ்மாக் பார்களில், காலி மது பாட்டில்களை சேகரிக்கும் உரிமை உள்ளது. தற்போது பார்களில் சேகரமாகும் பாட்டில்களை அமைச்சர், ஆளும் கட்சி நிர்வாகிகளின் பெயரை சொல்லி தனியார் நிறுவனம் டெண்டர் எடுத்துள்ளதாக, கூறி காலி பாட்டில்களை எடுக்கின்றனர். இதனால் எங்கள் வருமானம் குறைந்து, வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. எங்கள் உரிமம் இன்னும் முடியாமல் உள்ளது. அரசு மற்றும் நீதிமன்ற உத்தரவான காலி மது பாட்டில்கள் திரும்ப பெறும் திட்டத்தை வரவேற்கிறோம். அதேநேரம், இது போல் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

# நூற்றாண்டு பழமை வாய்ந்த சக்கம்பட்டி முத்து மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம்!



ஆண்டிபட்டி டிச.4

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள சக்கம்பட்டியில் நூற்றாண்டு பழமை வாய்ந்த புகழ்பெற்ற சக்கம்பட்டி முத்துமாரியம்மன் கோவில் அமைந்துள்ளது

ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் சித்திரை திருவிழாவில் தேனி மாவட்டம் மட்டுமல்லாது அண்டை மாவட்டங்களில் இருந்தும் லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடி நேர்த்திக்கடன் செலுத்தும் சிறப்புடையது இக்கோவில்

இக்கோவில் கும்பாபிஷேகம் ஆகமவிதிப்படி 12 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று காலை நடைபெற்றது

அறநிலையத்துறைக்கு கட்டுப்பட்ட கோவிலில் கும்பாபிஷேக விழா மூன்று நாட்களுக்கு முன்பு விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கியது இதையடுத்து ஐந்து கட்ட வேள்வி யாகசாலை பூஜை நடைபெற்று இன்று காலை கடங்கள் புறப்பாடு ஆகி சிவாச்சாரியார்கள் வேத மந்திரம் ஓத கலசத்தில் 108 புண்ணிய தீர்த்தங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட புனிதநீர் தெளிக்கப்பட்டது அப்போது ஆயிரக்கணக்கான கைகளில் காப்புகட்டி விரதம் இருந்த ஆண் பெண் பக்தர்கள் பயபக்தியுடன் அம்மனை வழிபட்டனர் இதையடுத்து கூடியிருந்த பக்தர்களின் மீது நவீன டிரோன்கள் மூலம் புனிதநீர் தெளிக்கப்பட்டு தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெற்றது

இதன்பின்பு முத்துமாரி அம்மனுக்கு மகாதீபாரதனை காட்டப்பட்டது இதையடுத்து பத்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டதுஆயிரக்கணக்கானோர் கூடிய விழாவில் அசம்பாவித சம்பவங்களை தடுக்க ஆண்டிபட்டி காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்

## நத்தம் அருகே

# வீட்டில் புகுத்த நல்லபாம்பு!

நத்தம், டிச.4

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே பாலப்பநாயக்கன்பட்டி பாறைக்குளத்தை சேர்ந்தவர் சந்திரன்(38). விவசாயி.இவரது ஓட்டு வீட்டில் நேற்று நல்லபாம்பு ஒன்று ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. இதை பார்த்து பதறிய சந்திரன் நத்தம் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார்.அதன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் அம்சராஜன் உள்ளிட்ட வீரர்கள் வீட்டில் ஊர்ந்து கொண்டிருந்த 4 அடி நீளமுள்ள நல்லபாம்பை கருவி மூலம் லாவகமாக பிடித்தனர். பின்னர் அந்த பாம்பு நத்தம் வனத்துறையினரிடம் ஒப்படைக்கபட்டு வனப்பகுதிக்குள் விடப்பட்டது



செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திருக்கழுக்குன்றம் வட்டம் குன்னத்தூர் கிராமத்தில் நடந்த விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களை நேற்று குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, படுகாயமடைந்த 6 நபர்களுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம், காயமடைந்த ஒருவருக்கு ரூ.50,000/-த்திற்கான காசோலைகளை வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் மு.பாபு, செங்கல்பட்டு சார் ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன், மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பிரியா பசுபதி மற்றும் மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி கடலூர் மாவட்ட ஓய்வு பெற்ற அலுவலர் சங்கம் கருப்பு பட்டை அணிந்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



கடலூர் டிச.4

வருகிற 5.12.2025 அன்று கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற உள்ள கருப்பு பட்டை அணிந்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது என்று கடலூர் மாவட்ட வெள்ளி விட ஆண்டு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

கடலூர் மாவட்ட ஓய்வு பெற்ற அலுவலர் சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டு(2000-2025) மாநாடு மங்கலம்பேட்டை ஊராட்சி ஒன்றிய முஸ்லிம் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது, விழாவிற்கு மங்கலம்பேட்டை கிளை தலைவர் பரமசிவம் தலைமை தாங்கினார்,

கடலூர் மாவட்ட தலைவர் செல்வராசு முன்னிலை வகித்தார், துணைத் தலைவர் பிரேமகுமாரி அனைவரையும் வரவேற்றார், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மணவாளன், சீனிவாசன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள், நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட பொருளாளர் திருமதி. சந்திரா, மாவட்டத் துணைத் தலைவர் பூவராகமூர்த்தி, மாவட்ட பிரச்சார செயலாளர் கவிஞர் ம.ரா.சிங்காரம், மாவட்ட அமைப்பு செயலாளர் விஜயராகவன் உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினார்கள், இறுதியில் முன்னாள் கிளை செயலாளர் ரங்கசாமி நன்றி கூறினார், குடும்ப பாதுகாப்பு நிதி ரூ.50 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சமாக உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற 5.12.2025 அன்று மாவட்ட தலைநகரங்களில் நடைபெற உள்ள கருப்பு பட்டை அணிந்து கவன ஈர்ப்பு கோரிக்கை ஆர்ப்பாட்டதில் ஓய்வு பெற்ற அலுவலர்களின் கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு உடனடியாக நிறைவேற்ற கோரி நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தில் அதிக அளவில் பங்கேற்பது என்று முடிவு செய்யப்பட்டது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

# திருப்பத்தூரில் தேசிய அளவிலான சடுகுடு திருவிழா முதல் பரிசு 6 லட்சம் என அறிவிப்பு



திருப்பத்தூர் டிச.4

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகரில் மிகவும் பழைமையான தூய நெஞ்சக் கல்லூரியின் 75 ஆம் ஆண்டு பவள விழாவை முன்னிட்டு கல்லூரி நிர்வாகம் மற்றும் திருப்பத்தூர் நகர தொழில் துறை கூட்டமைப்பு சார்பில் வருகின்ற 25 ஆம் தேதி முதல் 28 ஆம் தேதிவரை என மூன்று நாட்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்கும் தேசிய அளவிலான சடுகுடு திருவிழா போட்டிகள் நடைபெறுகிறது. இந்த போட்டியில் இந்தியாவில் இருந்து 32 அணிகள் பங்கேற்கின்றனர். இதில் வெற்றி பெறும் அணிகளுக்கு முதல் பரிசாக 6 லட்சம், இரண்டாவது பரிசாக 4 லட்சம், மூன்றாவது பரிசாக 2 லட்சம், நான்காவது பரிசாக 2 லட்சம் என பரிசுகள் வழங்கப்பட உள்ளது. இந்த சடுகுடு திருவிழா போட்டிக்கான நுழைவு கட்டணம் ஆன்லைன் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இந்த சடுகுடு திருவிழா போட்டி துவக்க விழாவில் தமிழக துணை தலைவர் உதயநிதி ஸ்டாலின், சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் உட்பட பலர் பங்கேற்க உள்ளனர் என சடுகுடு திருவிழாவின் ஒருங்கிணைப்பாளர் எழிலரசன் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார். அப்போது உடன் கல்லூரி முதல்வர் மரிய அந்தோணி ராஜ், கூட்டமைப்பின் நிர்வாகிகள் கணேஷ்மல், சுப்பிரமணியன், கலைவாணன், கண்ணதாசன், தம்பா கிருஷ்ணன் உட்பட பலர் உடன் இருந்தனர்.

# கோத்தகிரியில் பள்ளிக் குழந்தைகள் கலை நிகழ்ச்சி மூலம் ரூ.3 லட்சம் நிதி வசூலித்த பள்ளி மாணவர்கள்

நீலகிரி,டிச.4

1946ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையினால் இரண்டாம் உலகயுத்தில் அழிவுற்ற நாடுகளில் உள்ள சிறார்களுக்கு உணவு மற்றும் சுகாதார வசதிகளை வழங்கும் நோக்குடன் ஹிழிமிசிணிதி எனப்படும் ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் உருவாக்கப்பட்டது.இந்த நிதியமானது வளர்ந்து வரும் நாடுகளில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளிட்ட தாய் சேய் தொடர்பான வசதிவாய்ப்புக்களை பெருக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வருகின்றது. 1965ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு இவ்வமைப்பிற்கு வழங்கப்பட்டது.ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியமானது தனது திட்டங்களுக்கான நிதி வசதிக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் தனியார் நிறுவனங்களையே சார்ந்துள்ளது. உலக நாடுகளுக்கு போர், பேரிடர் காலங்களில் ஏற்படக்கூடிய வறுமை, நோய் தாக்குதல், உணவு தண்ணீர் தட்டுப்பாடு



ஆகியவற்றை எதிர்கொள்ள இந்த நிதியம் உதவுகிறது. இந்நிலையில் நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் உள்ள ஜூஸ்ட்ஸ் பள்ளியில் குழந்தைகளால் குழந்தைகளுக்காக என்ற தலைப்பில் ஐக்கிய குழந்தைகள் நிதியத்திற்கு நன்கொடை ஈட்டும் வகையில் வித்தியாசமான கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் போர், பேரிடர் காலங்களில் குழந்தைகளுக்கு உணவு, குடிநீர், சுகாதாரம், கல்வி உள்ளிட்டவை கிடைக்கப் பெறாததை எடுத்துரைக்கும் வகையில் இசை, நாடகம், நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அதேபோல் குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர் முறையை ஒழிப்பது குறித்து விழுப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. குழந்தைகளால் குழந்தைகளுக்காக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியால் ஏற்பட்ட தாக்கத்தினால் அரங்கில் கூடியிருந்த பெற்றோர்கள் சுமார் ரூ.3 லட்சத்திற்கும் மேல் நன்கொடை அளித்தனர். மாணவ மாணவிர்களின் இந்த நிகழ்ச்சி பெற்றோர்களை நெகிழ்ச்சி அடைய செய்துள்ளது. இந்நிகழ்ச்சியில் பள்ளி தாளாளர் தன்ராஜ் தலைமை வகித்தார் .சரோ தன்ராஜ் ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராக கோபிநாத் டி மேனன், அபிவிருத்தி நிபுணர் மற்றும் முன்னாள் தலைவர், UNICEF மாநில அலுவலகம், டாக்டர் கெசெவினோ ஆரம் தலைவர், சாந்தி ஆசிரம் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள் .



கார்த்திகை தீபத்தை முன்னிட்டு நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் காவேரிப்பட்டினம் –சேலம் பிரதான சாலையில் அகல் விளக்குகள் விற்பனை மும்முரமாக நடக்கிறது. பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர்.

# மேட்டூர் அணை 16 கண் மதகில் பச்சை நிறமாக மாறிய நீர்!

## ரசாயன கழிவுகள் கலப்பு? அரசு நடவடிக்கை எடுக்க கோரிக்கை!!

மேட்டூர்,டிச.4

சேலம் மாவட்டம்,மேட்டூர் அணையின் மொத்த நீர்த்தேக்க உயரம் 120 அடி., மொத்த கொள்ளளவு 93.47 டி. எம்.சி ..நீர்த்தேக்க பரப்பளவு 60 சதுர மைல்களாகும்.

இந்நிலையில் அணையின் 16 கண் மதகு பகுதியில் பாசிகள் படர்ந்து தண்ணீர்பச்சை நிறமாக மாறி துர்நாற்றம் வீசி வருகிறது. இதனால் அணையை ஒட்டியுள்ள கவிபுரம், தங்கமா புரிபட்டனம், சேலம் கேம்ப், பெரியார் நகர் , அண்ணா நகர் பகுதிகளில் மக்கள் கடும் அவதி அடைந்து வருகின்றனர்.

தண்ணீர் கடும் துர்நாற்றம் வீசுவதோடு மாசடைந்து சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. மேலும் காவிரி கரையோரப் பகுதியில் வசிக்கும் மக்கள் அணை நீரை குடிநீராக பயன்படுத்தி வந்த நிலையில் ,தற்போது இந்த நீரை பயன்படுத்துவதால் பல்வேறு நோய்த்தொற்றிற்கு ஆளாவதாக குற்றச்சாட்டு தெரிவித்தனர்.

மேலும் 16 கண் பகுதியில் உள்ள மதகுகள்துருப்பிடித்து சேலம் அடைவதற்கு வாய்ப்பு உள்ளது.இந்த நீரானது அணையை சுற்றியுள்ள தொழிற்சாலைகளில் இருந்து திருந்துவி டப்பட்ட கழிவு நீரா அல்லது காவிரி, கர்நாடக பகுதிகளில் இருந்து வெளியேற்றப்படும் ரசாயன கழிவுகளால் தண்ணீர் பச்சை நிறத்தில் மாறி மாசடைந்து காணப்படுகிறதா என்பது குறித்து மாசுகட்டுப்பாட்டு வாரியஅதிகாரிகள்மற்றும்நீர்வளத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு அணையில் தேங்கியுள்ள கழிவுநிறை அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவிரி கரையோர மக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.



இலவசவீட்டு மனைபட்டாகேட்டு முன்னாள் அமைச்சர் பழனியப்பனிடம் பொதுமக்கள் கோரிக்கை மனு அளித்தனர்.

# ரெயிலில் தவறவிட்ட நகைகள் மீட்பு!

## பெண் பயணியிடம் போலீசார் ஒப்படைத்தனர்!!

தர்மபுரி, டிச. 4

ரயில் பயணத்தின்போது, நேற்று சேலத்தில் பெண் பயணி தவறவிட்ட நகைகளை, ரயில்வே போலீசார் உடனடியாக மீட்டு, தர்மபுரி ரயில்வே ஸ்டேஷனில் உரிமையாளரிடம் ஒப்படைத்தனர்.

சேலம் மாவட்டம், மாரமங்கலத்துபட்டியை சேர்ந்த தமிழ்செல்வி, (57) இவர் அவரது குடும்பத்தினருடன் கடந்த, 28 அன்று சேலத்தில் இருந்து நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் ரயிலில் கோவில்பட்டி உறவினர் வீட்டு திருமணத்திற்காக சென்றனர். திருமணம் முடிந்தபின், நேற்று முன்தினம் இரவு நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் ரயிலில் சேலம் ரயில்வே ஸ்டேஷன் வந்த போது, தமிழ்ச்செல்வி அவருடைய ஹேண்ட் பேக்கை பயணம் செய்த ரயில் பெட்டியில் மறந்து வைத்து விட்டு சென்றார். அதில், 8 பவுன் நகை, ரூ. 3 ஆயிரம் ரோகம், உள்ளிட்டவை இருந்துள்ளது. இது குறித்து, தமிழ்ச்செல்வி சேலம்



ரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவ செந்தில்குமாரிடம் தகவல் அளித்தார். எக்ஸ்பிரஸ் ரயிலில் ரோந்து பணியில் இருந்த, ரயில்வே போலீசார் நகைகளுடன் ஹேண்ட்பேக் மீட்டு தர்மபுரி ரயில்வே போலீசில் ஒப்படைத்தனர். அதை தொடர்ந்து, தர்மபுரி ரயில்வே போலீசார் தமிழ்செல்வியை வரவழைத்து, ஹேண்ட் பேக்குடன்நகைகளை ஒப்படைத்தனர்.

## தண்டனையில் இருந்து விலக்கு அறிவிப்பு:

# பிரதமர் மோடிக்கு இலங்கை தமிழர்கள் நன்றி தெரிவித்து கடிதம்!

நாமக்கல், டிச.4

இலங்கை தமிழர் முகாமில் வசிப்போர், குடிவரவு மற்றும் வெளி நாட்டவர் சட்டத்தின் கீழ், தண்டனையில் இருந்து விலக்கு அளிப்பதாக, மத் திய அரசு அறிவித்துள்ளது. இதற்கு நன்றி தெரிவித்து,



பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பினர்.

நாமக்கல் மாவட்டத்தில், பரமத்தி, எருமப்பட்டி, எம். மேட்டுப் பட்டி ஆகிய இடங்களில் உள்ள, இலங்கை தமிழர் முகாமில், 700 குடும்பங் களை சேர்ந்த, 2,500க்கும் மேற்பட்டோர் வசிக் கின்றனர். இலங்கையில் இருந்து, 2015 ஜன., 9க்கு முன், உரிய ஆவணங்க ளின்றி இந்தியாவுக்குள் நுழைந்து, அரசிடம் பதிவு

செய்து சட்டப்பூர்வமாக தங்கியுள்ளனர். அதன்படி, தமிழகம் முழுவதும், 103 முகாம்களில், 58,000 பேர் வசிக்கின்றனர்.

தண்டனையிலி இந்நிலையில், மத்திய அரசு, கடந்த செப்., 2ல், குடிவரவு மற்றும் வெளி நாட்டவர் சட்டத்தின் கீழ், ருந்து விலக்கு அளித்து, அரசாணை வெளியிட்டது. இதையடுத்து, நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த இலங்கை தமிழர் முகாமில் வசிப்போர், பிர தமர் மோடிக்கு நன்றி தெரி வித்து, நாமக்கல் தலைமை அஞ்சல் அலுவலகத்தில் இருந்து, 370 கடிதங்களை அனுப்பினர்.

இதுகுறித்து, பரமத்தி இலங்கைதமிழர் முகாமை சேர்ந்த வினோதன் கூறியதாவது:

கடந்த, 1954 முதல் 2015 ஜன., 9க்கு முன், இலங்கையில் இருந்து ஏராளமானோர் அகதிக ளாக தமிழகம் வந்தனர். அவர்கள், முகாம் களில் தாங்கி உள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில் மட்டும், 2,500 பேர் வசிக் கின்றனர். மத்திய அரசு. 103 கடந்த செப்.,ல் வெளி யிட்ட அரசாணையில், 'இலங்கையில் இருந்து, 2015க்கு முன் திரும்பி வந்து முறையாக இந்திய அரசிடம் பதிவு செய்து வசித்து வருபவர்களுக்கு, குடிவரவு மற்றும் வெளி நாட்டவர் சட்டத்தின் கீழ், தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கிறோம்' என்பதை வரவேற் கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## ஈரோட்டில்

# ரயான் துணி வாங்கி ரூ.1 கோடி மோசடி!

## 2 பேர் தலைமறைவு!!

ஈரோடு,டிச.4–

ஈரோட்டில் ரயான் துணி வாங்கி ரூ.1 கோடி மோசடி செய்தஇருவர்தலைமறைவு குற்றவாளிகளாக ஆகஅறிவிக்கப்படுவர்எனநீதிமன்றம்எச்சரிக்கைவிடுத்துள்ளது.

ஈரோடு சூரம்பட்டி மாரப்பா வீதியைச் சேர்ந்த லால் சந்திரவால் மகன் நரேஷ்குமார்(55). அதே பகுதியைச் சேர்ந்தவர்பிரபுராஜ் அஞ்சலராம் மகன் ரத்தன்குமார்பிரபுராஜ் படேல் (54). இவர்கள், இருவரும் ஜவுளித் துணிகளை மொத்தமாக கொள்முதல் செய்து வியாபாரம் செய்து வந்தனர்.

இதில், நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் பகுதியில் துணிக்கடை நடத்தி வரும் முனியப்பன் என்பவரிடம் இருந்து ரயான் துணிகளை கொள்முதல் செய்து 26 நிறுவனங்களுக்கு நரேஷ்குமாரும், ரத்தன்குமார்பிரபுராஜ்படேல் ஆகிய இருவரும் விற்பனை செய்துள்ளனர். ஆனால், ரயான் துணிகளை கொள்முதல் செய்ததற்கான பணத்தை முனியப்பனிடம் ரூ.1.46 லட்சம் மற்றும் டெக்ஸ்டைல் நிறுவனங்களிடம் ரூ.1 கோடி வரை மோசடி செய்துள்ளனர்.

இதுகுறித்து, ஈரோடு மாவட்ட குற்றப் பிரிவு போலீஸார்கடந்த 2009ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்து நரேஷ்குமாரையும், ரத்தன்குமார்பிரபுராஜ் படேலையும் தேடி வந்தனர். நீதிமன்றம் மூலம் பிடியாணை பிறப்பிக்கப்பட்டும் அவர்களை தற்போது வரை கண்டுபிடிக்க முடியவில்லை.

மோசடியில் ஈடுபட்ட நரேஷ்குமாரும், ரத்தன்குமார பிரபுராஜ் படேல் ஆகியோர்டிசம்பர்16ஆம் தேதிக்குள் ஈரோடு குற்றவியல் நீதிமன்றம் எண் 2இல் நேரில் ஆஜராக வேண்டும். தவறும்பட்சத்தில் இருவரும் தலைமறைவு குற்றவாளியாக அறிவிக்கப்படுவர்என ஈரோடு குற்றவியல் நீதித் துறை நடுவர்நீதிமன்றம் எண்2 நீதிபதி எஸ்.ராஜ்குமார்உத்தரவிட்டுள்ளார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

மேட்டூர்,டிச.4

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 5,128 கன அடியிலிருந்து 5,141 கன அடியாக அதிகரித்துள்ளது. நீர் மட்டம் 115.58 அடி.நீர் இருப்பு 86.59 டி.எம்.சி. அணையிலிருந்து காவிரி ஆற்றில் 1,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

கிழக்குமேற்கு கால்வாய் பாசனத்திற்கு 400 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

# நாமக்கல் மாவட்டத்தில் 5 நாட்கள் மழை!

## வானிலை மையம் தகவல்!!

நாமக்கல்,டிச.4

நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லுாரியில் அமைந்துள்ள, வானிலை



ஆய்வு மையம் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாமக்கல் மாவட் டத்தில், கடந்த வாரம் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்தது. பகல் நேர வெப்பநிலை, 29 டிகிரி செல்ஷியஸ், இரவு நேர வெப்பம், 23 டிகிரி செல்ஷியஸ் என்றளவில் நிலவியது. இன்று முதல், 7 வரை, ஐந்து நாட்கள், அதிகபட்ச பகல்நேர வெப்ப நிலை, 25 முதல், 28 டிகிரி செல்ஷியஸ் வரை இருக்கும். குறைந் தபட்ச இரவு நேர வெப்பநிலை, 21 முதல், 23 டிகிரி செல்ஷியஸ் வரை இருக்கும். வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாவட்டத்தில், இன்று, 20 மி.மீ., நாளை, (4–ந் தேதி) 30 மி.மீ., 5–ல், 16 மி.மீ., 6–ல், 15 மி.மீ., 7–ல், 10 மி.மீ., என்ற அளவில், மழை பெய்ய வாய்ப்புள் ளது என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்பமை சார்பு நீதிமன்றம்,
தாராபுரம்
R.P. எண் : 32/2025
அ.வ. எண்: 250/2019
1. தமிழ்ச்செல்வன்
2. செல்லத்துரை
மனுதாரர்கள் /1, 2 பிரதிவாதிகள்
/எதிராக/
குப்பாத்தாள்,
சு.பெ.குழந்தைசாமி,
கோட்டைமேடு தெரு,
தாராபுரம் டவுன்,
திருப்பூர் மாவட்டம்,
...எதிர்மனுதாரர் /வாதி

அறிவிப்பு

தாராபுரம் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் உங்கள் மீது தாக்கல் செய்துள்ள R.P.எண்:32 / 2025 அ.வ.எண்:250/ 2019ன் படியான மனு வருகின்ற 19.01.2026ந் தேதி வாய்தா போடப்பட்டு உள்ளது. இதைப் பொறுத்து உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் சமூகம் நீதிமன்றத்தில் நாளது தேதியில் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணை தெரிவிக்க வேண்டியது. அல்லாத பட்சத்தில் ஆட்சேபணை ஏதும் இல்லையென உத்திரவிடப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கின்றோம்

மனுதாரர்கள் வழக்கறிஞர்,
**கே.தென்னரசு**, பி.எஸ்ஸி., பி.எல்.,
**எம்.பாலசுப்ரமணியன்**, பிகாம்.,பி.எல்.,
வழக்கறிஞர்கள், தாராபுரம்.

மாண்பமை சார்பு நீதிமன்றம்,
தாராபுரம்
அ.வ.எண்: 71/2025
அப்துல்மஜீத் வாதி
/எதிராக/
1. பாரிஷா,
க.பெ.லேட்.சையது இப்ராஹிம்,
2வது பில்டிங், முதல் தளம்,
கதிர் நகர் 3வது வீதி,
டி.எஸ்.கே மருத்துவமனை,
கதிர் லேஅவுட், திருப்பூர் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.
2. சுல்தான் அலி,
த.பெ.லேட்சையது இப்ராஹிம்,
2வது பில்டிங், முதல் தளம்,
சுதிர் நகர் 3வது வீதி,
டி.எஸ்.கே மருத்துவமனை,
கதிர் லேஅவுட், திருப்பூர் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.
3. சபீராபானு,
த.பெ.லேட்.சையது இப்ராஹிம்,
2வது பில்டிங், முதல் தளம்,
கதிர் நகர் 3வது வீதி,
டி.எஸ்.கே மருத்துவமனை,
கதிர் லேஅவுட், திருப்பூர் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.
.. 6 முதல் 8 பிரதிவாதிகள்

அறிவிப்பு

தாராபுரம் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் உங்கள் மீது தாக்கல் செய்துள்ள அ.வ.எண்:71/2025 வழக்கு வருகின்ற 22.01.2026ந் தேதி வாய்தா போடப்பட்டு உள்ளது. இதைப் பொறுத்து உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் சமூகம் நீதிமன்றத்தில் நாளது தேதியில் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணை தெரிவிக்க வேண்டியது. அல்லாத பட்சத்தில் ஆட்சேபணை ஏதும் இல்லையென உத்திரவிடப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கின்றோம்

மனுதாரர்கள் வழக்கறிஞர்,
**கே.தென்னரசு**, பி.எஸ்ஸி., பி.எல்.,
**எம்.பாலசுப்ரமணியன்**, பிகாம்.,பி.எல்.,
வழக்கறிஞர்கள், தாராபுரம்.

# டிராக்டர் மோதி தொழிலாளி பலி!

பாலக்கோடு, டிச.4

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு தாலுகா, பஞ்சப்பள்ளி ஒட்டர்தின்னை கிராமத்தை சேர்ந்த கூலித்தொழிலாளி ஆஞ்சி, (55). இவர் பைக்கில் ராயக்கோட்டை செல்வதற்காக புறப்பட்டார். கூலிக்கானுார் சூடனுார் சாலையில், முன்னே சென்ற டிராக்டரை முந்தி செல்ல முயன்றார்.அப்போது,

டிராக்டர் திடீரென வலது புற மாக திருப்பியதால், ஆஞ்சியின் மீது டிராக்டரின் முன் சக்கரம் மோதியது. இதில், தலையில் பலத்த காயமடைந்த ஆஞ்சி சம்பவ இடத்திலேயே பலி யானார். பஞ்சப்பள்ளி போலீசார் விசாரித்து வருகின்றனர்.



ஈரோடு மாவட்ட கலெக்டர் கந்தசாமி ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவ பயனாளியிடம், மருத்துவர்கள் அளித்து வரும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

# பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்திய இந்து அறநிலைய துறை அதிகாரிகள்!

## தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்க தலைவர் கடும் கண்டனம்!!

திண்டுக்கல் டிச 4,

பழனி திருக்கோவில் ஊழியர்கள் செய்தி சேகரிக்க சென்ற நிருபர்களை தாக்கியதை கண்டித்து தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கத்தின் தலைவர் சரவணன் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். அதன் விபரம் வருமாறு: பழனி தண்டாயுதபாணி கோயிலுக்கு சொந்தமான இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வந்த இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அதனை செய்தி சேகரித்த பத்திரிகையாளர்கள் மீது பழனி திருக்கோயில் ஊழியர்கள் தாக்குதல் நடத்தினார்கள். இதில் பலத்த காயமடைந்த பத்திரிகையாளர்கள் மருத்துவமையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதல் நடத்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்ககோரி பத்திரிகையாளர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

செய்தி சேகரித்த பத்திரிகையாளர்கள் மீது நடைபெற்ற தாக்குதலை தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. தாக்குதல் நடத்திய பழனி திருக்கோயில் ஊழியர்கள் மீது உரிய நடவடிக்கையைவிரைந்து எடுத்திட வேண்டும்மென தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கத்தின் தலைவர் சரவணன் கேட்டுக் கொள்வதாக தனது அறிக்கையில்தெரிவித்துள்ளார்.



வாக்காளர் பட்டியில் சிறப்பு தீவீர திருத்தம்–2026 முன்னிட்டு திருப்பூர் மாநகராட்சி பாண்டியன் நகர் பகுதியில் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் பெறப்படும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# வாணியம்பாடியில் வீட்டின் கதவு ஜன்னல் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து கொள்ளை முயற்சி ஈடுபட்ட மர்ம நபர்கள்!



வாணியம்பாடி, டிச.4

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த கரிமாபாத் பகுதியை சேர்ந்த மோசின்சல்மாதம்பதியினர். இவர்களுக்கு 5 பிள்ளைகள் உள்ள நிலையில் வாழ்வாதாரத்திற்காக வீட்டை பூட்டி விட்டு கடந்த ஒரு மாதமாக பெங்களூரில் தங்கி பணிபுரிந்து வருகின்றனர். வீட்டை அவ்வபோது சல்மாவின் தந்தை சென்று பார்த்து விட்டு வருவது வழக்கம். இந்த நிலையில் நீண்ட நாட்களாக பூட்டி இருக்கும் வீட்டை நோட்டமிட்ட மர்ம நபர்கள் வீட்டின் பின்புறம் உள்ளகதவின்பூட்டுஉடைக்கமுடியாததால் வீட்டின் கதவு, ஜன்னல் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து கொளுத்தி கதவை உடைத்து உள்ளே சென்று திருட முயற்சி செய்துள்ளனர். நீண்ட நேரம் பூட்டிய வீட்டிலிருந்து புகைமூட்டம் வந்ததை அறிந்த பகுதி மக்கள் சிலர் பின்புறமாக சென்று பார்ப்பதற்குள் அங்கிருந்து கொள்ளையர்கள் கொண்டு வந்த மண்ணெண்ணெய் கேன் மற்றும் பிளேடு உள்ளிட்ட ஆயுதங்களை போட்டுவிட்டு தப்பித்தனர்.

இதே போல் கடந்த 10 நாட்களுக்கு முன்பு திருட முயற்சிக்கும் போது மோட்டாரை ஆன் செய்து தண்ணீர் வீடு முழுவதும் நிரப்பி விட்டு சென்றுள்ளனர்.

ஒரே மாதத்தில் தொடர்ந்து பூட்டி இருக்கும் வீட்டில் இருமுறை கொள்ளைமுயற்சி செய்துள்ள சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஆம்பூர் அருகே ஆட்டோ கவிழ்ந்து விபத்து; பெண் தொழிலாளர்கள் உட்பட 10 பேர் காயம்!

வாணியம்பாடி, டிச.4

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த மிட்டாளம் பகுதியில் உள்ள தனியார் (சி. ஆர்) காலணி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் 8 பேர் பணி முடிந்து ஆட்டோ மூலம் வீடு திரும்பி கொண்டு இருந்தனர்.

அப்போது ஆட்டோ கரும்பூர் அடுத்த சாமுண்டியம்மன் தோப்பு கூட்டுச்சாலையில் சென்று கொண்டிருந்த போது, சாலையில் அங்குமிங்கும் ஓடிய தெருநாய்கள் மீது மோதாமல் இருக்க ஆட்டோவை திருப்பிய போது, ஆட்டோ கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் சின்ன மலையாம்பட்டு பகுதியை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் பாலகிருஷ்ணன் மற்றும் அரங்கல்துருகம், காரப்பட்டு, மோதகப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து காலணி தொழிற்சாலைக்கு சென்று வீடு திரும்பிய பெண் தொழிலாளர்கள் கனகா, சோபா, முனியம்



மாள், அனுராதா, பொற்கொடி, பாக்யா, கமலவேணி ,குமுதா, பூங்கொடி உள்ளிட்ட 10 பேர் காயமடைந்தனர். காயம் அடைந்தவர்களை பகுதி மக்கள் மீட்டு சிகிச்சைக்காக ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் குறித்து உமராபாத் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.